BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# நிதிரீதியான அறிக்கை தாக்கல் செய்வதில் சிறந்த திறன் வெளிப்பாட்டுக்காக ப்ராம்ப்ட்டன் நகரம் அங்கீகாரம் பெற்றிருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 29, 2021) – அடுத்தடுத்து தொடர்ச்சியாக 19 ஆவது ஆண்டிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் கனடா நாட்டின் அரசு நிதி அதிகாரிகளுக்கான சங்கம் [Government Finance Officers Association (GFOA)] வழங்குகின்ற, நிதிரீதியான அறிக்கை தாக்கல் செய்வதற்கான கனடிய விருதினை [Canadian Award for Financial Reporting (CAnFR)] ப்ராம்ப்ட்டன் நகரம் வென்றிருக்கிறது.

இந்த CAnFR விருதானது, நகரத்தின் 2019 ஆண்டிற்கான வருடாந்திர நிதி அறிக்கை தாக்கல் செய்தமைக்காக வழங்கபடுகிறது; இது அரசு கணக்கு பதிவதில் மற்றும் நிதி அறிக்கை தாக்கல் செய்வதில் சிறந்த திறன் வெளிப்பாட்டினை அங்கீகரிக்கிறது மற்றும் உள்ளூர் அரசு மற்றும் அதன் மேலாண்மையின் குறிப்பிடத்தக்க சாதனையை எடுத்துக் காட்டுகிறது.

விரிவான மற்றும் உயர்தரமான வருடாந்திர அறிக்கைகளைத் தயாரிப்பதன் மூலம் ப்ராம்ப்ட்டன் நகரம் தனது நிதி அறிக்கையில், வெளிப்படையான தன்மை மற்றும் முழுமையான வெளிப்பாட்டினையும் கொண்டு வந்துள்ளது; இதன் காரணமாகவே கனடாவின் பட்டய நிபுணத்துவ கணக்காளர்களின் (CPA) பொதுத்துறை கணக்குப் பதிவியல் வாரியம் (CPA) வகுத்துள்ள பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குப் பதிவியல் கோட்பாடுகளின் (GAAP) குறைந்தபட்ச தேவைகளையும் தாண்டியமைக்காக ப்ராம்ப்ட்டன் நகரம் இந்த CAnFR விருதினை வென்றிருக்கிறது.

கனடாவில் உள்ள நகராட்சி அரசு அமைப்புகள், உயர்தரமான நிதி அறிக்கைகளை வெளியிட வைப்பதில் ஊக்கமளிப்பதற்கும், இந்த அறிக்கைகளைத் தயாரிக்கும் அதிகாரிகளுக்கு சக அரசுகளின் அங்கீகாரம் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குவதற்காவுமே இந்த CAnFR விருது திட்டம் கொண்டுவரப்பட்டது.

இந்த வருடாந்திர நிதிநிலை அறிக்கையானது திட்டத்தின் உயர்ந்த தரங்களை பூர்த்தி செய்தமைக்காக, பாரபட்சமற்ற கனடிய பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்களால் தீர்ப்பு சொல்லப்பட்டுள்ளது, இதில் ப்ராம்ப்ட்டனின் நிதி நிலையை தெளிவாகத் தொடர்புபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட, ஆக்கபூர்வமான “முழு வெளிப்பாட்டிற்கான சுவாரசியத்தை” யை நிரூபிப்பதுவும் மற்றும் சாத்தியமான பயனர்களையும் பயனர் குழுக்களையும் படிக்கவைக்க ஊக்கப்படுத்தலும் அடங்கும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

”வரி செலுத்தும் நமது மக்கள் முழு வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த நிதி நடைமுறைகளைக் காட்டிலும் குறைவான எதையும் எதிர்பார்ப்பதில்லை. நிதி அறிக்கை தாக்கல் செய்யும் வகையில், மதிப்புமிக்க GFOA விருதை வெல்வது என்பது, நமது குடிமக்கள் மீதான எமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது மற்றும் தேசிய மற்றும் சர்வதேச முதலீடுகளை ப்ராம்ப்ட்டன் நகரம் தொடர்ந்து ஈர்ப்பதால் நமது குடிமக்கள் நம் மீது கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை பலப்படுத்துகிறது. ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

”தொடர்ச்சியாக அடுத்தடுத்து 19 ஆண்டுகளாக நிதி அறிக்கை தாக்கல் செய்வதன் பேரிலான மதிப்புமிக்க CAnFR விருதை ப்ராம்ப்ட்டன் நகரம் வென்றுள்ளது என்று பெருமை கொள்கிறேன். விருது வழங்குவதற்கான திட்டத்தின் கடுமையான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வருடாந்திர அறிக்கையைத் தயாரிக்க ஒத்துழைக்கும் ஊழியர்களின் தரப்பில் குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது. ”

- *ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வார்டுகள்* 9 & 10; *தலைமைப் பொறுப்பு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“CAnFR விருது என்பது ப்ராம்ப்ட்டன் நகரம் மற்றும் அதன் நிர்வாகத்தின் குறிப்பிடத்தக்க சாதனையை குறிக்கிறது. இந்த விருதை வெல்வது என்பது எங்கள் ஊழியர்களுக்கும், நிதி அறிக்கை தாக்கல் செய்வதில் நமது நகரத்தின் உயர்ந்த தரங்களுக்கும், வெளிப்படைத்தன்மை மற்றும் முழு வெளிப்படுத்தல் கொள்கைகளுக்கும் ஒரு சான்றாகும்; இது நன்கு இயங்கும் நகரமாக நகரசபையின் முன்னுரிமையுடன் ஒருமித்து போகிறது ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca